**செய்தி வெளியீடு எண்:388** **நாள்: 23.06.2017**

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், 483 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றில் மாணவ / மாணவியர் சேர்க்கை ஆண்டுதோறும் ஜீன் மாதத்தில் துவங்கும். இந்த வருடம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள 27494 இடங்களுக்கும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% அரசு ஒதுக்கீட்டின் கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 8990 இடங்களுக்கும் இணையதளம் மூலம் கலந்தாய்வு அனைத்து மாவட்டங்களிலும் இன்று முதல் துவங்குகிறது. இக்காலியிடங்களில் சேருவதற்கு 52904 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்பித்துள்ள அனைவருக்கும், கலந்தாய்வு நடைபெறும் நாள், இடம் மற்றும் நேரம் போன்ற விவரங்கள் அவர்களுடைய கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கலந்தாய்வு தொடர்பான நிகழ்ச்சி நிரல் பத்திரிக்கைச் செய்தி வாயிலாகவும், இணையதளம் மூலமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கலந்தாய்வு 23.06.2017 முதல் 07.07.2017 வரை நடைபெறுகிறது.

இக்கலந்தாய்வில், மாணவ / மாணவியர்களின் 8 ஆம் வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையிலும் / இனசுழற்சியின் அடிப்படையிலும் இணையதள கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் கலந்தாய்வு மூலம் அங்குள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேருவதற்கு மாணவ / மாணவியர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

இன்று சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறுகிறது. அதில் மாணவ / மாணவியர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான தொழிற்பயிற்சி நிலையத்தையும் / தொழிற் பிரிவையும் தேர்ந்தெடுத்தனர். நாளை **(24.06.2017)** முதல் பொது பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெற உள்ளது.

இக்கலந்தாய்வு, சென்னை மாவட்டதில் உள்ள மாணவ / மாணவியர்களுக்கு அரசு தொழிற்பயிற்சி நிலையம் கிண்டியில் நடைபெறுகிறது. இக்கலந்தாய்வில் கலந்து கொண்டு தங்களுக்கு விருப்பமான தொழிற்பயிற்சி நிலையத்தையும் / தொழிற் பிரிவையும் தேர்ந்தெடுத்த மாணவ / மாணவியர்களுக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர். நிலோஃபர் கபீல் அவர்கள் சேர்க்கை ஆணையை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருமதி. P.அமுதா, அரசுச்செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அவர்களும், திரு. N.சுப்பையன், இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களும் மற்றும் அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**